முருகப்பெருமான் துணை

**மகான் சொரூபானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

20.11.2022, ஞாயிற்றக்கிழமை

1. ஞானச்சுடராக உலகமெங்கிலும்
ஞானபண்டிதன் வழிபாடு பெருக
ஞானம் அருளும் அரங்கனே
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தேள் திங்கள்
குறைவிலா சதுர்திகதி கதிர் வாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 04 ம் நாள் 20.11.2022, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் சொரூபானந்தரும் இனிதே
தேசிகனுக்கு அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை உலகநலம்பெற வேண்டி
அருளுவேன் அரங்கன் கேட்க
வாசி வென்ற மேல்நிலை காண
வஜ்ர சொர்ண தேகநிலை பெற
4. நிலைபெற ஞானிகள் காட்டும்
நீதி வழிகளாகும் சன்மார்க்க
கொலை நீக்கி உயிர் காக்கும்
குறைவிலா தயவு நெறிகளை
5. நெறிகளை ஏற்று நன்கு
ஞான அவதார உயர்குரு
அறத்தின் சக்தி அரங்கனிடம்
அடைய வேண்டும் உயர் தீட்சை
6. தீட்சைபெற்று தினமும் பூசையாக
தெரிவிப்பேன் காலை மாலை நிசி
தீட்சைவழி செபதபம் தொடரவே
தேகமனோ பலம் கூடியே
7. கூடியே ஐம்பொறி வழிதனிலும்
குற்றங்கள் அனுகா விலகி
கூடிடும் குருவருள் பலமாக
குறைவிலா ஜீவதயவு கூடி
8. கூடியே அரங்கன் தரும
குறைவிலா அன்னதான சேவை
நாடியே பொருளுதவி செய்து
நன்மை கூட சேவை ஆற்றி
9. ஆற்றியே உயர் மக்கள் ஆக
ஆற்றல் தனை தருமபலமுடன் பெருக்க
மாற்றம்தரும் முருகப்பெருமானின்
மகத்துவமான சக்தி வரமாகக் கிட்டி

10. கிட்டியே தவயோக சித்திகளான
குறைவிலா தேக ஆன்ம சுத்தி
தட்டாது குருவருளால் அனுகி
தரணியோர் சர்வ வசம் கண்டு

11. கண்டுமே உலகை மாற்றும்
கருணைமிக்க ஞான ஆட்சியை
உண்டாக்கும் சக்திகளாக மாறுவர்
உரைத்திட்ட அனுகூல ஆசி முற்றே

—சுபம்—